முதன்மை மாவட்ட நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் (இருப்பு) ஸ்ரீவில்லிபுத்தூர்.

**MCOP.No.104/2022**

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09-ம் நாள் மனுதாரா் சாட்சியின் வாக்குமூலம். 1969-ம் வருடத்திய சாட்சிய சட்டம் பிரிவு 5-ன் ஏற்பாட்டின்படி திரு.ரகுபதிராஜூ, தலைமை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மு.வெள்ளைத்துரைச்சி | ஜாதி | : |
| த.பெ | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| தாலுகா | : | வயது | : |

09.09.2024

R.W.1

முதல் விசாரணை :–

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்தது. மேற்படி அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது அலுவலகத்திலிருந்து சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் அளித்துள்ளனர். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். TN 69 K 6851 என்ற பதிவு எண் கொண்ட லாரியின் மோட்டார்வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்கிறேன். அந்த ஆய்வறிக்கை எ.ம.சா.ஆ.1 ஆகும். மேற்படி ஆய்வறிக்கையில் மேற்படி லாரிக்குரிய பெர்மிட் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் மேற்படி லாரிக்கு எப் சி இல்லை. பொது பயன்பாட்டில் உள்ள தார் சாலைகளில் எப் சி இல்லாமல் லாரியை ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்தினால் மோட்டார் வாகன சட்டப்படி குற்றம். வாகனத்தின் உரிமையாளர் எப் சி எடுக்காத ஒரு காரணத்திற்காக ரூபாய் 7000 அபராதம் செலுத்தியுள்ளார். அதற்கான ரசீது எ.ம.சா.ஆ.2 ஆகும்.

மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை–

நான் திருவில்லிபுத்துார் வட்டார போக்குவரத்து கழகத்தில் கடந்த 8 மாத காலமாக வேலை பார்க்கிறேன். விபத்திற்குண்டான வாகனத்தை தணிக்கை செய்யும் போது நான் திருவில்லிபுத்துார் வட்டார போக்குவரத்து கழகத்தில்

பணியில் இல்லை. எ.ம.சா.ஆ.1ல் மேற்படி வாகனத்திற்கு ஆய்வின்போது பெர்மிட் தாக்கல் செய்யப்படவில்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை – இல்லை.</u>